வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No.: P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 07    07.02.2026 திங்கட்கிழமை    இதழ் : 40    பக்கங்கள் : 08

# அரசியல் தீர்வு குறித்து தமிழ்த் தரப்பு பொதுநிலைப்பாட்டை எட்ட முயற்சி

## சுவிஸ் தூதரக ஏற்பாட்டில் 19 ஆம் திகதி பேச்சு

யாழ்ப்பாணம், பெப். 09

இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தரப்புக்கள் அனைத்தையும் ஒருமித்த நிலைப்பாட்டுக்குக் கொண்டுவரும் நோக்கில் சுவிற்சர்லாந்து தூதரகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 19 ஆம் திகதி தமிழ்த்தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இலங்கை - சுவிற்சர்லாந்து பாராளுமன்ற நட்புறவு சங்கத்துடன் கூட்டிணைந்து சுவிற்சர்லாந்து அரசாங்கத்தின் ஏற்பாட்டில் அந்நாட்டின் கூட்டாட்சி அரசியல் முறைமை மற்றும் தேசிய ஒருமைப்பாடு வலுவாக்கம் என்பன பற்றி இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்குத் தெளிவூட்டும் வகையிலான செயலமர்வொன்று கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 - 21 ஆம் திகதி வரை சுவிற்சர்லாந்தில் நடைபெற்றது.

அச்செயலமர்வில் தேசிய மக்கள் சக்தியின் 07

## மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு திட்டம்?

### பூரண விளக்கத்துடன் ஜெனீவா செல்ல தயாராகும் அரச தரப்பு

கொழும்பு, பெப். 09

மாகாண சபை தேர்தலை இவ்வருடத்தில் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும், அதனை அடுத்த வருடத்துக்கு ஒத்திவைக்க தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என தெரிவிக்கப்படுகிறது.

மாகாண சபை தேர்தல், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரம், புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் உட்பட தேசிய 07

## கிவுல் ஓயா குறித்து கலந்துரையாடல் எம்.பிக்கள் வெலிஓயாவுக்கு அழைப்பு

வவுனியா, பெப். 09

வவுனியா வடக்கை மையப்படுத்தி முன்னெடுக்கப்படவுள்ள கிவுல் ஓயாத்திட்டம் சம்பந்தமாக இன்று திங்கட்கிழமை வெலிஓயாவில் உள்ள மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகத்தில் முக்கிய கலந்துரை யாடலொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 07

# நாணய நிதியம், உலக வங்கி உயர்குழுவினர் இலங்கைக்கு!

## பொருளாதார மீட்சி தொடர்பில் பேச்சு நடத்துவர்

கொழும்பு, பெப். 09

சர்வதேச நிதியங்களின் உயர்மட்டக் குழுவினர் அடுத்தடுத்து இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜியேவா எதிர்வரும் 17 ஆம் திகதி இலங்கை வருகிறார்.

அவர் 18 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்திப்பார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விஜயத்தின்போது விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் 5 மற்றும் 6 ஆவது மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உலக வங்கிப் பிரதிநிதிகள் அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளனர்.

2022-23 பொருளாதார நெருக்கடியால் இடைநிறுத்தப்பட்ட நெடுஞ்சாலைகள், கல்வி மற்றும் உட்கட்டமைப்பு தொடர்பான திட்டங்களை மீண்டும் தொடங்கும் வகையில் இந்த விஜயம் 07





## பயங்கரவாதச் சட்டத்தை தக்கவைப்பதே புதிய வரைவு முன்மொழிவின் நோக்கமா?

### சர்வஜன நீதி அமைப்பு கேள்வி

கொழும்பு, பெப். 09

புதிய சட்டத்தின் ஊடாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்வது குறித்த விவாதங்கள் தோற்றுவிக்கப்பட்டிருப்பதானது, அச்சட்டத்தின் பிரயோகத்தைத் தொடர்ந்து தக்கவைத்திருப்பதற்கு அரசில் அங்கம் வகிக்கும் எவரேனும் மேற்கொண்டிருக்கும் முயற்சியின் ஓரங்கமா என்ற கேள்வி எழுவதாக சுட்டிக்காட்டியிருக்கும் சர்வஜன நீதி அமைப்பு, பயங்கரவாதத் தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் எனவும், தற்போது புதிதாக முன்மொழியப்பட்டிருக்கும் சட்ட வரைவைத் தாம் முற்றாக எதிர்ப்பதாகவும் தெரிவித்திருக்கின்றது. 07

## சிறீரெலோவின் உதயராசா கைது!

கொழும்பு, பெப். 09

சிறீரெலோ கட்சியின் தலைவர் பி.உதயராசா கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அதன்படி, 07 நாட்கள் தடுப்புக் காவலில் அவர் 07

## மருத்துவ அதிகாரிகளின் போராட்டம் தீவிரமாகும்!

### 11ஆம் திகதி இறுதி தீர்மானம்

கொழும்பு, பெப். 09

தீர்க்கப்படாத தொழிசார் மற்றும் நிர்வாகப் பிரச்னைகளைச் சுட்டிக்காட்டி, இலங்கையின் இலவச பொதுச் சுகாதார மற்றும் வைத்தியசாலைக் கட்டமைப்பைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிற்சங்க நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்தத் தயாராக உள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் 07

## தேசிய மின் கட்டண கொள்கை இன்று அமைச்சரவைக்கு வரும்?

கொழும்பு, பெப். 09

மின்சார சபை மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ், தேசிய மின்சக்தி கொள்கை மற்றும் தேசிய மின் கட்டணக் கொள்கை தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் திட்டம் 5 கட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருவது டன், அதில் 04 கட்டங்கள் தற்போது வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. 07

## விளான் சந்தியில் குழு மோதல் இருவர் வைத்தியசாலையில்!

யாழ்ப்பாணம், பெப். 09

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விளான் சந்தியில் நேற்று மாலை இரு குழுவினருக்கு இடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டதுடன், ஒருவர் இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் ஆரம்பத்தில் பெரிய விளான் மற்றும் பண்டத்தரிப்பு பகுதிகளை சேர்ந்த இருவருக்கி டையே மோதல் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து இருவருக்கு சார்பாகவும் 07

### டித்வா சூறாவளி நிவாரணம்

## ஐ.நா. முன்னெடுத்த திட்டத்துக்கு 22 மில்லியன் டொலர் குவிந்தது!

கொழும்பு, பெப். 09

இலங்கையில் கடந்த வருடம் வீசிய "டித்வா" சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஐக்கிய நாடுகள் முன்னெடுத்த மனிதாபிமான முன்னுரிமைத் திட்டத்துக்கு இதுவரை 22.4 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி கிடைத்துள்ளது.

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# வடக்கு-கிழக்கு படைமுகாம்களால் தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதி!

### பொதுஜன பெரமுன கூறுகிறது

கொழும்பு, பெப். 09

வடக்கு, கிழக்கில் இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் இருப்பதால்தான் தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என மகிந்த அணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சாந்த பண்டார கூறியதாவது:-

சுதந்திரம் என்பது அபிமானம். அதன் கம்பீரத்தன்மையைக் குறைமதிப்புக்கு உட்படுத்தக்கூடாது. உலகில் எந்தவொரு நாடும் அவ்வாறு செய்யாது.

ஆனால், இலங்கையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் சுதந்திரத்தின் கம்பீரத்தன்மை இல்லாமல் போயுள்ளது. செலவுகளைக் கட்டுப்படுத்துகின்றோம் என்ற போர்வையில் அபிமானம் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது.

படையினரின் வீரதீரச் செயல்கள் பற்றி பேசப்படவில்லை. நாட்டில் இன்று அவசரகாலச் சட்டம் அமுலில் உள்ளது. இந் நிலையில் இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினத்தன்று வடக்கு, கிழக்கில் கறுப்புக் கொடி ஏற்றப்படுகின்றது. இதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

வடக்கு - கிழக்கில் இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் இருப்பதால்தான் தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு சில இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன. எஞ்சியவற்றையும் அகற்றினால் பொலிஸையும் அகற்றுமாறு கோருவார்கள்- என்றார். (அ)

## ஜனாதிபதி நிதியத்துக்கு கிடைக்கும் மருத்துவ உதவி விண்ணப்பங்கள் 59 சதவீதம் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 09

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகள் பிரதேச செயலகங்களுக்குப் பரவலாக்கப்பட்டு டிஜிற்றல் மயமாக்கப்பட்டதன் ஊடாக, ஓராண்டு காலத்துக்குள் மருத்துவ உதவிக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை 59 சதவீதத்தால் அதிகரித்துள்ளன என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி, 2025ஆம் ஆண்டில் ஜனாதிபதி நிதியத்துக்கு 5,277 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. கடந்த 2024 ஆம் ஆண்டில் 3,313 விண்ணப்பங்களும், 2023 ஆம் ஆண்டில் 3,456 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன. இதன்படி, 2024 ஆம் ஆண்டை விட 2025 ஆம் ஆண்டில் 1,964 மேலதிக விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. விண்ணப்பதாரர்களில் 70 சதவீதத்திற்கும் அதிகமானோருக்கு ஏற்கனவே மருத்துவ உதவிகள் வழங்கி முடிக்கப்பட்டுள்ளன.

2025 ஆம் ஆண்டில், வடக்கு மாகாணத்தில் விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் 253 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் கிழக்கு மாகாணத்தில் 135 சதவீதத்தாலும், மத்திய மாகாணத்தில் 116 சதவீதத்தாலும், ஊவா மாகாணத்தில் 108 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கருத்து சுதந்திர விவகாரங்களில் அரசாங்கம் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவேண்டும்!

### சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்து

கொழும்பு, பெப். 09

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரம் தொடர்பான விவகாரங்களில், அரசாங்கம் தனது பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வேண்டும் என்று சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

சுதந்திர ஊடக இயக்கத்தின் அழைப்பாளர் லசந்த டி சில்வா மற்றும் செயலாளர் திலீஷா அபேசுந்தர ஆகியோரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அவதானிப்புகள் குறித்துத் தமது இயக்கம் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தாம் உறுப்பினராக உள்ள சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் இந்த நிலவரங்களை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் கருத்துச் சுதந்திரம் மற்றும் இணையவழிப் பாதுகாப்பு தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு விரிவாக விளக்கியுள்ளது.

குறிப்பாக, இலங்கை பொலிஸாரின் செயற்பாடுகள் இந்த விவகாரங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும், ஊடகவியலாளர்களின் தொழில்சார் நடவடிக்கைகளில் பொலிஸார் மறைமுகமாகத் தலையிடுவதாகவும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

பொலிஸ் மா அதிபரினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்களை மீறி, முறையான காரணங்களைத் தெரிவிக்காமல் ஊடகவியலாளர்களையும் செயற்பாட்டாளர்களையும் பொலிஸ் நிலையங்களுக்கு அழைக்கும் நடைமுறை குறித்தும் ஆணைக்குழு கவலை வெளியிட்டுள்ளது.

சில சந்தர்ப்பங்களில், ஊடகப் பணிகளால் ஏற்படும் அவதூறு தொடர்பிலான முறைப்பாடுகளுக்காகவே இவர்கள் அழைக்கப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், அரசியலமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரமானது, அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்குள் மட்டுமே மட்டுப்படுத்தப்பட முடியும் எனச் சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## தேசிய பாதுகாப்பு பலமாக இருக்கிறது



### பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

கொழும்பு, பெப். 09

நாட்டின் தேசிய பாதுகாப்பு பலமாக இருப்பதாகவும் பொதுமக்கள் மத்தியில் இது குறித்து எந்தவொரு கவலையும் இல்லையென பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீண்ட நாட்களாக ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம், ஜனாதிபதியுடன் நடத்தப்பட்ட சுமூகமான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து முடிவுக்கு வந்துள்ளது. ஆசிரியர்களின் கோரிக்கைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து ஆராயப்பட்டு, அவர்களுடன் எட்டப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் மீண்டும் கடமைக்குத் திரும்ப அவர்கள் சம்மதித்துள்ளனர்.

மீனவச் சமூகம் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் கடற்றொழில் அமைச்சு விசேட அவதானம் செலுத்தி வருகிறது. மீனவர்களின் கோரிக்கைகளுக்குத் தகுந்த தீர்வுகள் வழங்கப்பட்டு வருவதோடு, தற்போதைய நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளது.

நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பான அச்சங்கள் குறித்து பதிலளித்த போது, பாதுகாப்பு விவகாரங்கள் மிகவும் பலமாக இருப்பதாகவும், பொதுமக்கள் மத்தியில் இது குறித்து எவ்வித கவலையும் இல்லை.

சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எவ்வித பாரபட்சமும் காட்டப்படமாட்டாது. நீதிமன்றத்தின் தீர்மானங்கள் மற்றும் அரசியலமைப்பின் 12.1 பிரிவின் கீழ் அனைவரும் சமமாக நடத்தப்படுவார்கள். சட்டத்திற்குப் புறம்பான எவ்வித நடவடிக்கைகளுக்கும் இடமில்லை. முதற்கட்டமாகச் சாட்சியங்கள் மற்றும் அறிக்கைகளைத் திரட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது., அதன் பின்னரே உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்-என்றார். (அ)

## சிறப்பாக இடம்பெற்றது வேலாயுதம் மகாவித்தியாலய விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், பெப். 09

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி பாடசாலை அதிபர் ரி.செந்தில்நாதன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் 1:30 மணியளவில் ஆரம்பமானது.

இதில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு மேலைத்தேய இசை முழங்க வரவேற்கப்பட்டு மங்கல சுடர்கள் ஏற்றப்பட்டு விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள், பதக்கங்கள், சான்றிதழ்களை நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பிரபல தொழிலதிபரும் பாடசாலை பழைய மாணவருமான விஜயகுமாரன் ரகுராம், விவசாய பயிற்சி கல்லூரியின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆனந்தராசா ராகுவாரன் உட்பட பலரும் வழங்கி கௌரவித்தனர். (அ)



## ஓட்டோக்களுக்கு ஒரே செயலி!

கொழும்பு, பெப். 09

நாட்டிலுள்ள அனைத்து முச்சக்கர வண்டிகளும் செயலியை அடிப்படையாகக் கொண்டு இயங்கக்கூடிய வகையிலான திட்டத்தை அறிமுகப்படுத்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் முறையான சேவையை வழங்குதல், கட்டணங்களில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்தல் மற்றும் பயணிகளின் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாக கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத நிலவரப்படி, இலங்கையில் பிக்மீ, ஊபர் மற்றும் ஹெலாகோ ஆகியவை, முக்கிய முச்சக்கரவண்டி அழைப்பு செயலிகளாக செயல்படுகின்றன.

முச்சக்கர வண்டிகள் தற்போது ரக்ஸி என்ற வாடகை வகையில் அடங்குவதால், அவை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கு உட்பட்டு செயலி அடிப்படையிலேயே இயங்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கிளிநொச்சியில் மாவையின் நினைவு

கிளிநொச்சி, பெப். 09

இலங்கை தமிழரசுக் கட்சியின் மறைந்த முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசாவின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் மாவை ஒரு சரித்திரம் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர். (அ)

## போதைப் பொருளுடன் பல்கலை மாணவி கைது!

கொழும்பு, பெப். 09

அம்பாந்தோட்டை, வீரகெட்டிய பிரதேசத்தில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் இளம் யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீரகெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய யுவதியே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த யுவதி பல்கலைக்கழகம் ஒன்றில் டிப்ளோமாக் கற்கை நெறியைப் பயின்று வருகின்றார் என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஹெரோய்ன் போதைப் பொருள் தொடர்பில் அதே பல்கலைக்கழகத்தில் கற்கும் யுவதியின் காதலன் மீது சந்தேகப்பட்டுள்ள பொலிஸார், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
09.02.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், தை 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## அரசியல் என்பது ஒரு தந்திரக் கலை

ஜே.வி.பியின் சக்திவாய்ந்த பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அண்மையில் இந்தியாவுக்கு சென்றிருந்தார். இது தொடர்பில் ஏற்கனவே பதிவு செய்திருக்கின்றோம். ஆனால் அவர் இந்தியாவுக்கு பயணமாவதற்கு முன்னர் ஒரு விடயத்தை குறிப்பிட்டிருந்தார். அதாவது. நாட்டை கட்டியெழுப்பவே நாங்கள் ஆட்சியை பொறுப்பேற்றோம் - மக்களின் ஆதரவுடன் அதனை நிறைவேற்றுவோம் - மக்கள் விரும்பாவிட்டால் ஆட்சியை தொடரமாட்டோம். மக்கள் விரும்பாவிட்டால் எவருமே ஆட்சியில் இருக்க முடியாது. இந்த நிலையில் இதனை ஒரு விடயமாக எதற்காக கூற வேண்டும்?

ஜே.வி.பி ஒரு கட்சி ஆட்சியை கட்டியெழுப்ப முற்படுவதாக ஒரு அப்பிராயம் சிலரிடம் உண்டு. அதாவது சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி இருப்பது போன்று ஆனால் இவ்வாறானதொரு பின்னணியில்தானா ரில்வின் இந்த கருத்தை முன்வைத்திருக்கின்றார் - அல்லது, மக்களின் விருப்பங்கள் சில உண்டு அதாவது, மாகாண சபையை முறைமையை இல்லாதொழிப்பது ஏனெனில் அது ஒரு தோல்வியுற்ற விடயம் - எனவே மக்கள் விரும்பாத ஒன்றை நாங்கள் புற அழுத்தங்களுக்காக செய்ய முடியாது. ஏனெனில் மக்கள் விரும்பாத ஒன்றை நாங்கள் செய்ய முற்பட்டால் மக்கள் எங்களை ஆட்சியிலிருந்து வெளியேற்றிவிடுவார்கள். இதனை மறைமுகமாகக் குறிப்பிடுவதற்காகத்தான் ரில்வின் இந்தக் கருத்தை தெரிவித்தாரா?

அவர் எதற்காக தெரிவித்திருந்தாலும் கூட, புதுடில்லி பயணத்தின் பின்னர் அவர் எவ்வாறான கருத்துக்களை முன்வைக்கின்றார் என்பதை நாம் உற்று நோக்கவேண்டும். அதுதான் அடுத்த கட்டமாக ஜேவி.பி தலைமையிலான அரசாங்கத்தின் நகர்வுகளாக இருக்கப் போகின்றது. சிங்கள இராஜதந்திரம் இந்தியாவை ஏமாற்றுகின்றது என்னும் அம்புலிமாமாக் கதைகளை இனியும் தமிழ் அரசியலில் கூறிக்கொண்டிருப்பது பொருளற்றது. மேலும் அது மக்களை தொடர்ந்தும் அறியாமையில் சிறைப்படுத்துவதற்கான கருத்துக்கள். இதனை சிலர் அறியாமையின் காரணமாக கூறுகின்றனர் - இன்னும் சிலரோ வேண்டும் என்றே கூறுகின்றனர் - அவ்வாறானவர்களுக்கு தமிழ்ச் சூழவில் எந்தவொரு விடயமும் ஆக்கபூர்வமாக நடந்துவிடக்கூடாது என்பதுதான் நோக்கம்.

சில இணைய ஊடகங்கள் இவ்வாறான பொய்ப் பிரசாரங்களை முழுமூச்சாகச் செய்து கொண்டிருக்கின்றன. இங்கு சிங்கள இராஜதந்திரம் என்பது அல்ல விடயம். ஏனெனில் ஒவ்வொரு அரசுகளும் அதன் நலன்களை பேணிப் பாதுகாப்பதற்கான தங்திரங்களை புரிந்து கொண்டுதான் இருக்கும். அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆனால் அந்தத் தந்திரங்களுக்கு எதிர் தந்திரங்கள் புரியும் ஆற்றலுடன் தமிழர் அரசியல் சமூகம் இருக்கின்றதா என்பதுதான் விடயம்.

ஜே.வி.பி யைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களும் ஏற்காத ஒன்றையே நாம் தோல்விடையந்த ஒன்றாகக் கூறுகின்றோம் என்பதையே அவர்கள் வலியுறுத்த முற்படுகின்றனர். அதில் உண்மையுமுண்டு. எந்தத் (தமிழ்த் தேசிய) தமிழ் கட்சி, மாகாண சபை முறைமையிலிருந்து பயணிப்பதே சரியானது, சமஷ்டிக் கதைகளை இனியும் கூறிக் கொண்டிருப்பதில் பயனில்லை என்று உறுதியாகவும் நேர்மையாகவும் கூறுகின்றது? இந்தச் சூழலில் தமிழ் மக்களும் ஏற்காத ஒன்றை எதற்காக நாங்கள் சுமக்க வேண்டும் என்று ஒரு வாதம் வருமாயின் அதனை எவ்வாறு நிராகரிப்பது. இதன் காரணமாகவே புதுடில்லியும் அரசியலமைப்பின் பதின்மூன்று தொடர்பில் உதட்டளவான கரிசனையை மட்டுமே காண்பிக்கின்றது.

இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு தொடர்பான உரையாடல் ஒன்றிற்கான அடித்தளத்தை மாகாண சபை முறைமையை மட்டுமே தாங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் மாகாண சபைதான் அதிகாரப் பகிர்விற்கான அத்திபாரமாகும். இதனை கெட்டியாக பிடித்துக் கொண்டால் மட்டுமே தமிழர்களுக்கு அரசியல் இருக்க முடியும். இதனை மிகவும் தெளிவாக புரிந்து கொண்டதன் காரணமாகவே ரில்வின் தந்திரமாக அது ஒரு தோல்வியடைந்த முறைமை என்கின்றார். இதற்கான எதிர் தந்திரம் என்ன என்பதை புரிந்து கொள்வதில்தான் தமிழருக்கான அரசியல் தந்திரம் நிலைகொண்டிருக்கின்றது.

### கல்வித்துறையில் பாரிய மாற்றம்!

# தரம் 9 வரை பாடத்திட்டங்களை மாற்றியமைக்க அரசு தீர்மானம்

கொழும்பு, பெப். 09

ஐந்து பிரதான தூண்களை அடிப்படையாகக் கொண்டு கல்விச் சீர்திருத்தங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாகவும், அடுத்த 3 ஆண்டுகளில் ஏனைய தரங்களுக்கும் இச்சீர்திருத்தங்கள் விரிவுபடுத்தப்படும் என்றும் சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கல்விச் சீர்திருத்தத்திற்கான தேசிய இயக்கத்தின் இரத்தினபுரி மாவட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டில் 1 மற்றும் 6ஆம் தரங்களுக்கான கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும், அடுத்த ஆண்டில் 2 மற்றும் 7 ஆம் தரங்களுக்கான சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், 2028 ஆம் ஆண்டில் 3 மற்றும் 8 ஆம் தரங்களுக்கும், 2029 ஆம் ஆண்டில் 4 மற்றும் 9 ஆம் தரங்களுக்கும் கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்படி, அடுத்த சில ஆண்டுகளில் தரம் 9 வரையிலான முழுமையான பாடத் திட்டங்கள் மறுசீரமைக்கப் படவுள்ளன.

இந்தச் சீர்திருத்தங்களுக்குத் தேவையான பாடத்திட்டங்களை உருவாக்குவதில் கல்வி நிபுணர்கள் இணைந்துள்ளதாகவும், முதலாம் தரத்திற்கான சீர்திருத்தங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

எவ்வாறாயினும், 6 ஆம் தரத்திற்கான பாடத்திட்ட மாற்றங்கள் மாத்திரம் அடுத்த ஆண்டு வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

21 ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய பிரஜைகளை உருவாக்குவதே இந்தச் சீர்திருத்தங்களின் பிரதான நோக்கமாகும் என்றும் அமைச்சர் ஜயதிஸ்ஸ வலியுறுத்தினார். (அ)

## எம்.பிக்களின் ஓய்வூதியம் ரத்து; 17ஆம் திகதி சபையில் விவாதம்!

கொழும்பு, பெப். 09

பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரிய ஓய்வூதியத்தை இரத்து செய்யும் சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்றத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி விவாதம் நடத்தப்படும் என சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அன்றைய தினமே மேற்படி சட்டமூலம் நிறைவேறும் எனவும் அவர் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்து செய்யும் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது அல்ல எனவும், சாதாரண பெரும் பான்மையுடன் அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றலாம் எனவும் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்பை சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தார். இந்நிலையிலேயே மேற்படி சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்றத்தில் 17 ஆம் திகதி விவாதம் நடத்தப் படவுள்ளது. தேசிய மக்கள் சக்தி வசம் மூன்றிலிரண்டு பெரும்பான்மைபலம் இருப்பதால் சட்டமூலம் இலகுவில் நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# இந்திய இராணுவ உதவியுடன் 10 “பெய்லி” பாலங்கள் அமைப்பு

கொழும்பு, பெப். 09

நாட்டில் ஏற்பட்ட டித்வா சூறாவளியால் கடுமையாக சேதமடைந்த உட்கட்டமைப்புகளை மீளக் கட்டியெழுப்புவதற்காக இந்தியாவினால் வழங்கப்பட்ட 10 பெய்லி பாலங்களைப் பொருத்தும் பணிகள், ஒரு மாத காலத்திற்குள் நிறைவு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாலங்களை நிறுவுவதற்கு இந்திய இராணுவத்தின் பொறியியல் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் தொழில்நுட்ப உதவிகளை வழங்கவுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனிதா ருவன் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.


இந்தப் பாலங்களை ஏற்றி வந்த இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான “ஐ.என்.எஸ் காரியல்” கப்பல், பெப்ரவரி 4 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது, சூறாவளி பாதிப்புகளைச் சீரமைக்க அறிவிக்கப்பட்ட 450 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான சிறப்பு இந்திய உதவித் திட்டத்தின் கீழ் இந்தப் பாலங்கள் வழங்கப் பட்டுள்ளன.

டித்வா சூறாவளியினால் பாலங்கள் நிரந்தரமாகவோ அல்லது பகுதியாகவோ சேதமடைந்த பகுதிகளில், போக்குவரத்துத் தொடர்புகளை மீண்டும் சீரமைப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

இந்த துரித புனரமைப்புப் பணிகள் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை விரைவில் வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப் படுகிறது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




அரசியல்ஆய்வாளர் சோதிலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. கல்யாண முயற்சிகள் வெற்றியடையும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். விருந்தினர் வருகையால் வீடு களைகட்டும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனங்களால் புது ஒப்பந்தம் செய்வீர்கள். சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
புதிய முயற்சி யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். நல்லன நடக்கும் நாள்.

**கடகம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம்லாபமடைவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**சிம்மம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். அலுவலகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கை நிறைவேறும்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். உற்சாகமான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**விருட்சிகம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வாகனத்தில் கவனம் தேவை. உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர் பக்கபலமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள்.

**மகரம்**
அனுபவ பூர்வமாக அறிவுப்பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். புதிய மாற்றம் ஏற்படும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

# "அரசமைப்பு மறுசீரமைப்பு செயன்முறையில் அரசியல் தீர்வு உள்வாங்கப்படுவது அவசியம்"

கொழும்பு, பெப். 09

தற்போது பேசப்படும் அரசமைப்பு மறுசீரமைப்பு செயன்முறையில் தமிழர் இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு நிச்சயமாக உள்வாங்கப்படவேண்டும். அன்றேல் அந்த அரசமைப்பிலிருந்து ஒரு சமூகம் வெளித்தள்ளப்பட்டுவிடும் என்று கலாநிதி குமாரவடிவேல் குருபரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"அரசமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்கள் 2022 ஆம் ஆண்டு உருவான அரகலய மக்கள் எழுச்சிப்போராட்டத்தின் பின்னரேயே தீவிரமடைந்திருக்கின்றன.

இருப்பினும், அதன் பின்னரான தேர்தல்களில் வாக்களித்த தமிழ்மக்கள், தமக்கான அரசியல் தீர்வுக்கு முன்னுரிமையளித்து, அதனைப் பிரதிபலிக்கும் வகையிலேயே வாக்களித்திருக்கிறார்கள்.

அந்தவகையில் தற்போது பேசப்படும் அரசமைப்பு மறுசீரமைப்பு செயன்முறையில் தமிழர் இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு நிச்சயமாக உள்வாங்கப்படவேண்டும்."- என்றார். (எ)

## சமுர்த்தி ஆரோக்கிய உணவகம் திறப்பு



யாழ்ப்பாணம், பெப். 09

சாவகச்சேரி சமுர்த்தி ஆரோக்கிய உணவக திறப்பு விழா சாவகச்சேரி பிரதேச செயலாளர் எவ். சி. சத்தியசோதி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக சமுர்த்தி திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் (குறுநிதி) மகேஷ் பெர்னாண்டோவும், யாழ்ப்பாணம் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் பொ. சிறீவர்ணனும் கலந்து சிறப்பித்தனர். விருந்தினர்களால் ஆரோக்கிய உணவகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேலும், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. மாணவர்களுக்கான சிப்தொர புலமைப் பரிசில் கொடுப்பனவும், தேசிய வலுவூட்டல் பயனாளிகளுக்கான வாழ்வாதார உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர். (எ)

## சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியராக பதவி உயர்வு




யாழ்ப்பாணம், பெப். 09

யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் பேராசிரிய ராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் நிதி முகாமைத்துவ துறை யைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரைப் பேராசிரியராகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக் கழகப் பேரவை கடந்த சனிக்கிழமை ஒப்புதல் வழங் கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் கடந்த 7 ஆம் திகதி சனிக்கிழமை, துணைவேந்தர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த நிதி முகாமைத்துவ துறையைச்சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சசீலா பாலகோபியின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி, நிதி முகாமைத்துவ துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சசீலா பாலகோபி, நிதி முகாமைத்துவத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (எ-03)

# சமுர்த்தி வங்கி கட்டட திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 09

துன்னாலை சமுர்த்தி வங்கிக் கட்டடத் திறப்பு விழாவும் கரவெட்டி சமுர்த்தி ஆரோக்கிய உணவகத் திறப்பு விழாவும் கரவெட்டி பிரதேச செயலாளர் திருமதி உமாமகள் மணிவண்ணன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினரும் கரவெட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான ஜெயச்சந்திர மூர்த்தி ரஜீவனும், யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனும், சிறப்பு விருந்தினர்களாக சமுர்த்தி திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் (குறுநிதி) மகேஷ் பெர்னாண்டோவும், யாழ்ப்பாணம் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் பொ. சிறீவர்ணனும் கலந்து சிறப்பித்தனர். விருந்தினர்களால் வங்கி நடவடிக்கைகளும், கரவெட்டி ஆரோக்கிய உணவகமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேலும், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன், மாணவர்களுக்கான சிப்தொர புலமைப் பரிசில் கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச செயலாளர், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர். (எ)

# தேசிய பூங்கா பகுதியில் கஞ்சாவுடன் இருவர் கைது

இரத்தினபுரி, பெப். 09

இரத்தினபுரி - உடவளவை தேசிய பூங்காவின் கோமகல, ஹம்பே கமுவ பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கஞ்சாவுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஹம்பேகமுவ பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போதே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது சந்தேகநபர்களிடமிருந்து, சுமார் 582 கிலோகிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (எ)

## பிரதேச சபை நிதியில் காப்பெற் வீதி அமைப்பு



யாழ்ப்பாணம், பெப். 09

வலி. வடக்கு பிரதேச சபையால் தெல்லிப்பழை சிறீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் முகப்பு வாயில் வீதி காப்பெற் வீதியாக அமைக்கப்பட்டுள்ளது. (எ)

## தபால் கட்டணங்கள் இன்று முதல் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 09

இன்று முதல் தபால் கட்டணங்களை அதிகரிப்பதற்குத் தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, குறைந்தபட்ச தபால் கட்டணத்தை 70 ரூபாயாக அதிகரிப்பதற்குத் தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், இந்தப் புதிய கட்டணங்கள் இன்று முதல் அமுலுக்கு வரும் எனவும் தபால் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டியை எதிர்க்கும் சிங்களவர்கள்: போதிய தெளிவுபடுத்தல்கள் இல்லை

### கவலைப்படுகிறார் கம்மன்பில

கொழும்பு, பெப். 09

சிங்களவர்கள் ஏன் சமஷ்டியை எதிர்க்கிறார்கள் என்பது குறித்து போதிய ஆய்வுகளோ, தெளிவுபடுத்தல்களோ இல்லை. இவ்விடயத்தில் சிங்களவர்களின் மனநிலையைப் புரிந்துகொள்ளாமல் முன்னோக்கி நகர முடியாது என்று பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைப் பொறுத்தமட்டில், நான் அம்முறைமையை ஆதரிக்கும் சிறுபான்மைத் தரப்புக்குள் இருக்கிறேன்.

ஏற்கனவே புதிய அரசமைப்பு தொடர்பில் பல்வேறு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கும் பின்னணியில், மீண்டும் ஒட்டுமொத்த நாடும் ஏற்றுக்கொள்ளாத புதியதொரு ஆவணத்தை உருவாக்குவதில் எவ்வித பயனுமில்லை என்பதே எனது நிலைப்பாடாகும்.

பெரும்பான்மையானோர் ஒருமித்த நாட்டையும், சிறுபான்மையானோர் சமஷ்டி முறைமையையும் வலியுறுத்தும் போக்கும், அதுசார்ந்த பிரிவினையும் எமது நாட்டில் பல தசாப்தகாலமாக நிலவுகின்றது. அந்தப் பிரிவினைகள் முன்னைய அரசமைப்பு முன்மொழிவுகளிலும் பிரதிபலித்தன."- என்றார்.

(எ)

# வேலைப் பளு தாங்க முடியாமல் கான்ஸ்டபிள் வெளியேறினார்!

கொழும்பு, பெப். 09

ஓய்வு இல்லாமல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டமை மற்றும் கடும் மன அழுத்தம் காரணமாக கான்ஸ்டபிள் ஒருவர் பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியேறிச் சென்ற சம்பவம் அளுத்கம பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

இவ்வாறு பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியேறியவர், மாத்தறை கெகனதுர பிரதேசத்தைச் சேர்ந்தவரும், அளுத்கம பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பிரிவில் கடமையாற்றியவருமாவார்.

அளுத்கம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய குறித்த அதிகாரி, நேற்று முன்தினம் பகல் ஓய்வின்றி தொடர்ச்சியாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டதால் கடும் உளவியல் அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளார்.

இதன் காரணமாக தம்மால் இனி கடமையைத் தொடர முடியாது எனக் கூறி, பொலிஸ் நிலைய தகவல் புத்தகத்தில் குறிப்பொன்றை இட்டுவிட்டு, தனது தனிப்பட்ட உடைமைகளையும் எடுத்துக்கொண்டு பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியேறிச் சென்றுள்ளார்.

# பல இடங்களில் கோர விபத்துக்கள்: இளைஞன் உட்பட மூவர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 09

நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற விபத்துக்களில் இளைஞன் ஒருவர் உட்பட மூவர் உயிரிழந்தனர்.

கண்டி - யாழ்ப்பாணம் ஏ -9 வீதியில் கெக்கிராவ மருத்துவ மனைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் 65 வயது பெண் ஒருவர் உயிரிழந்தார்.

மரதங்கடவல நோக்கிப் பயணித்த லொறி ஒன்று, வீதியைக் கடந்த பாதசாரிப் பெண் மீது மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், கெக்கிராவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, அம்பாறை - சியம்பலாண்டுவ வீதியில் "மினிமரு சந்தி"க்கு அருகில், சியம்பலாண்டுவ நோக்கி மரக்கறி ஏற்றிச் சென்ற லொறியும் எதிரே வந்த ஓட்டோவும் நேருக்கு நேர் மோதியதில் மற்றுமொரு விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோ சாரதி, இரண்டு பெண்கள் மற்றும் ஆண் ஒருவர் காயமடைந்து அம்பாறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், அதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

தல்கஸ்பிட்டிய, ஹபலன்காவ பிரதேசத்தைச் சேர்ந்த 73 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

விபத்து தொடர்பில் லொறி சாரதி மற்றும் ஓட்டோ சாரதி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி - கொழும்பு பிரதான வீதியின் ரன்தொம்பே பகுதியில் இடம்பெற்ற மற்றொரு விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

பலபிட்டிய நோக்கிப் பயணித்த வான் ஒன்றும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் பின்னால் அமர்ந்து சென்றவர் காயமடைந்து பலபிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மோட்டார் சைக்கிள் சாரதி உயிரிழந்தார்.

அளுத்வல பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், அம்பலாங்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வேட்பாளரை இலக்கு வைத்து களுத்துறையில் துப்பாக்கிச்சூடு

களுத்துறை, பெப். 09

களுத்துறை மாநகர சபைக்கு ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு தோல்வியடைந்துள்ளது.

களுத்துறை மாநகர சபை வேட்பாளரை இலக்கு வைத்து நேற்று முன்தினம் இரவு இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும், அது குறி தவறியதால் கொலை முயற்சி தோல்வியடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துக்கு முகங்கொடுத்தவர் களுத்துறை மாநகர சபைக்கு ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட பந்துல பிரசன்ன என்பவராவார்.

இவரை இலக்கு வைத்து 9 'மாதங்களுக்கு முன்னரும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டதாகவும், அதுவும் தோல்வியடைந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட இடத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது, பிஸ்டல்களுக்குப் பயன்படுத்தப்படும் தோட்டா ஒன்றும், தொலைபேசி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# நுகர்வோருக்கு ஆயுள் காப்புறுதி

அநுராதபுரம், பெப். 09

கூட்டுறவு விற்பனை நிலையங்களில் ஒரு மாதத்துக்குள் 10, 000 ரூபாய்க்கும் அதிகமான பொருட்களைக் கொள்வனவு செய்யும் நுகர்வோருக்கு ஆயுள் காப்புறுதி ஒன்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர், இந்தக் காப்புறுதி நுகர்வோருக்கு இலவசமாக வழங்கப்படும் எனவும், அது மூன்று இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடையது எனவும் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் ஆயுள் காப்புறுதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.



கூட்டுறவு ஊழியர்களுக்குத் திருப்திகரமான சம்பளம் மற்றும் ஆயுள் காப்புறுதி உள்ளிட்ட வசதிகளை வழங்கி, இந்தக் கூட்டுறவு இயக்கத்தைப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹற்றன் பொலிஸ் விடுதியில் பயங்கரம்: வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் முடிந்தது

## ஒருவர் காயம், ஒருவர் விளக்கமறியலில்

நுவரெலியா, பெப். 09

ஹற்றன் - பொகவந்தலாவ பகுதியில் கூர்மையான ஆயுதத்தால் தாக்கி, பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறித்த பொலிஸ் உத்தியோகத்தரின் பணியை இடைநீக்கம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விடுதியில் தங்கியிருந்த இந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றிய தில், ஒரு உத்தியோகத்தர் மற்றவரை கூர்மையான ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் வயிற்றுப் பகுதியில் பலத்த காயங்களுடன் தற்போது நாவலப்பிட்டி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய பொலிஸ் உத்தியோகத்தர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது, சந்தேகநபரை நாளை 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ)

# வெதுப்பக உரிமையாளர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

மட்டக்களப்பு, பெப். 09

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் ஓட்டோக்களில் வெதுப்பக உணவு வகைகளை விற்பனை செய்துவரும் 11 நபர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று களுவாஞ்சிக்குடி பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் கஜானன் தெரிவித்தார்.

வெதுப்பக தனிநபர் சுகாதாரம், மருத்துவ சான்றிதழ் இன்மை போன்ற பல காரணங்களுக்காகவே இவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் வெதுப்பக உரிமையாளர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று பிரதேச சபையில் நடைபெற்றது. இதன்போது அனைத்து வெதுப்பக உரிமையாளர்களுக்கும் தேவையான அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்பட்டிருந்தன. அந்த ஆலோசனைகளை மீறி இவர்கள் செயல்பட்டதன் காரணத்தாலேயே இவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று பொதுச் சுகாதார பரிசோதகர் மேலும் தெரிவித்தார். (எ)

# தொழுநோய் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு வீதி நாடகம்



மட்டக்களப்பு, பெப். 09

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்துக்குட்பட்ட களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச தொழுநோய் தினத்தை முன்னிட்டு களுவாஞ்சிக்குடி பொதுச் சந்தைக்கு முன்பாக விழிப்புணர்வு வீதி நாடகம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, தொழுநோய் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் துண்டுப்பிரசுரங்களும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர், களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (எ)

# கட்டாக்காலி மாடுகளுக்கான தண்டப்பணம் 10, 000 ரூபாய்

## மட்டக்களப்பு மாநகர சபை நடவடிக்கை

மட்டக்களப்பு, பெப். 09

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்தும் வகையில் தண்டப்பணம் 10 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் சிவம்பாக்கியநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் அமர்வு முதல்வர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தபோதிலும் அதனைக் கட்டுப்படுத்துவதில் பல சவால்களை எதிர்கொள்வதாகவும் இதன் காரணமாக சமூக ஊடகங்களில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதால் மாநகர சபையால் தொடர்ச்சியாக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக முதல்வரால் தெரிவிக்கப்பட்டது.

இதுவரையில் கட்டாக்காலி மாடுகளை பிடிக்கும்போது பதிவுசெய்யப்பட்ட மாடுகளுக்கு 5,000 ரூபாயும் பதிவுசெய்யப்படாத மாடுகளுக்கு 7,500 ரூபாயும் அறவிடப்பட்டதாகவும் அதனை மாற்றி இனிவரும் காலங்களில் கட்டாக்காலி மாடுகளுக்கு 10 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமாக அறவிடப்படும் என்ற முன்மொழிவு முதல்வரால் முன்வைக்கப்பட்டது. இதற்கு சபை அனுமதி வழங்கியது. (எ)

# கால்வாயில் கிடந்த சடலம்: மத்துகமவில் பரபரப்பு!

களுத்துறை, பெப். 09


மத்துகம - அகலவத்த வீதியின் தெல்கஸ் சந்திப் பகுதியில், வீதியோரக் கால்வாய் ஒன்றிலிருந்து நபரொருவரின் சடலம் மீட்கப்பட்டது.

இவ்வாறு உயிரிழந்தவர் இத்தேபன, மிரிஸ்வத்த பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டார்.

இவரது மரணத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் கூறினர்.

உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் நாகொட மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து மத்துகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# நீர் வடிந்தோடும் கால்வாயில் குப்பை கூழங்களால் துர்நாற்றம்



காரைதீவு, பெப். 09

அம்பாறை- காரைதீவு கண்ணகி அம்மன் கோவில் அருகில் உள்ள நீர் வடிந்தோடும் கால்வாய் குப்பை கூழங்களால் நிரம்பிக் காணப்படுகின்றது.

அம்பாறை -கல்முனை பிரதான வீதியின் இரு மருங்கிலும் உள்ள நீர் ஓடும் கால்வாய்களே இவ்வாறு குப்பை கூழங்களால் நிரம்பி வழிகின்றன.

இதனால், இப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் அப்பகுதியால் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

மேலும், குறித்த கால்வாயில் பியர் ரின்கள் பிளாஸ்ரிக் கலன்கள் உள்ளிட்ட உக்க முடியாத பல்வேறு பொருட்கள் காணப்படுகின்றன.

இதுதவிர தேங்கி நிற்கும் நீரால் டெங்கு போன்ற நோய்களும் பரவுவதற்கு காரணமாக அமைகின்றன.

இவ்வாறான கால்வாய்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்ற போதிலும் காரைதீவு பகுதியில் இன்னும் அந்தச் செயல்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை என்று மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (எ-01)

# சமையல் எரிவாயுக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்குமாறு வலியுறுத்தல்

கொழும்பு, பெப். 09

லாப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலைகள் வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்குவரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய 12. 5 கிலோ கிராம் லாப்ஸ் சிலிண்டரின் விலை 80 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நுகர்வோர் அதிகார சபை உறக்கத்தில் உள்ளதா? என்று கேள்வியை முப்பிய நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே, சமையல் எரிவாயு சிலிண்டருக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, லாப்ஸ் நிறுவன 12. 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 80 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் புதிய விற்பனை விலை 4,330 ரூபாயாகவும், 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1742 ரூபாயாகவும் காணப்படுகிறது.

இந்த விலை அதிகரிப்பு தொடர்பில் பொது மக்கள் கடும் விசனம் வெளிப்படுத்தியுள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தான் விரும்பிய வகையில் ஏனைய நாடுகளுக்கு தீர்வை வரியை அதிகரிப்பதை போன்று லாப்ஸ் நிறுவனம் தனது விருப்பத்துக்கு அமைய சிலிண்டரின் விலையை அதிகரித்துக் கொள்கிறது.- என்றார். (எ)

# இறைச்சிக் கடை உரிமையாளர்களுக்கு சுகாதார நடைமுறை பற்றி அறிவுறுத்தல்

திருகோணமலை, பெப். 09

திருகோணமலை- குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட மாட்டிறைச்சி மற்றும் கோழி இறைச்சிக் கடை உரிமையாளர்களுக்கு பொதுச் சுகாதார நடைமுறைகள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ. முபாரக் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், பொதுச் சுகாதாரம் தொடர்பில் கடை உரிமையாளர்களுக்கு தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

கடை உரிமையாளர்கள் தங்களின் கடைகளை எவ்வாறு சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்றும் கழிவுகளை எவ்வாறு அகற்ற வேண்டும் என்றும் தெளிவான விளக்கங்களை வழங்கிய அதேவேளை விலங்கு அறுவை மனையை எவ்வாறு பராமரிக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்...

சார்பில் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே, பிரதியமைச்சர் முனீர் முளப்பர், பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளருமான நிஹால் அபேசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான சந்திம ஹெட்டியாராச்சி, நிலாந்தி கொட்டஹச்சி, சமன்மலி குணசிங்க ஆகியோரும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவலவும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கமும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் பொதுச்செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தலதா அத்துக்கோரளவும், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரனும், மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் டபிள்யூ.ரி.பத்மா மஞ்சுளவும், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருக்கான ஒருங்கிணைப்பு செயலாளருமான கபிலன் சுந்தரமூர்த்தியும் கலந்துகொண்டிருந்தனர்.

அச்செயலமர்வின்போது சுவிட்ஸர்லாந்தின் அரசியல் முறைமை மற்றும் இருதரப்பு உறவுகள், சுவிற்சர்லாந்தின் கூட்டாட்சி முறைமையை ஆழமாகப் புரிந்துகொள்ளல் ஆகிய தலைப்புக்களில் இலங்கை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு விரிவான தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டதுடன், அதனுடன் தொடர்புடைய முக்கிய கட்டமைப்புக்களுக்கான கள விஜயங்கள் மற்றும் உயர்மட்ட சந்திப்புக்கள் என்பனவும் இடம்பெற்றன.

அவ்விஜயத்தைத் தொடர்ந்து அதுபற்றி அதில் பங்கேற்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட பிரதிநிதிகளிடம் கேட்டறிந்த இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் சிறி வோல்ற், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனையும் சந்தித்து மேற்படி விஜயம் குறித்து விளக்கமளித்திருந்தார்.

இவ்வாறு நிகழ்ந்த சந்திப்புக்களின்போது தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தைப் பொறுத்தமட்டில் சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம் என்பன விடயம் தமிழ்ப் பிரதிநிதிகளால் தூதுவர் சிறி வோல்ற்றிடம் எடுத்துரைக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் சுவிற்சர்லாந்து தூதரகத்தின் ஒருங்கிணைப்பில் ஒரு கூட்டு சந்திப்பை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் உடன்பட்டதை அடுத்து, அதனை எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பில் அதன் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், பாராளுமன்றக்குழுத் தலைவர் இரா.சாணக்கியன், பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறிதரன் மற்றும் ப.சத்தியலிங்கம் ஆகியோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பம் மற்றும் கட்சி தீர்மானிக்கும் பிறிதொருவரும், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரன் மற்றும் கூட்டணி தீர்மானிக்கும் பிறிதொருவரும் கலந்துகொள்ளவுள்ளனர். அதுமாத்திரமன்றி சிவில் சமூகத்தின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரனுக்கு அழைப்பு விடுப்பதற்கு சுவிஸ் தூதரகம் தீர்மானித்திருப்பதாக அறியமுடிகின்றது.

சுவிற்சர்லாந்து தூதுவர் சிறி வோல்ற்றின் மத்தியஸ்தத்தில் நடைபெறவிருக்கும் இச்சந்திப்பின்போது தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் சகல தமிழ்த் தரப்புக்களும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வருவது பற்றிக் கலந்துரையாடப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## மாகாண...

நல்லிணக்க பொறிமுறையின் பூர்ண விளக்கத்துடன் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான சிறப்பு இராஜதந்திரிகள் குழு ஜெனீவா கூட்டத்தொடரில் கலந்து கொள்ள உள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 23 ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாக உள்ளது. இதில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான இலங்கையின் உயர்மட்ட இராஜதந்திரிகள் குழு செல்ல உள்ளது.

இதன்போது இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் தேசிய நல்லிணக்க பொறிமுறைகள் குறித்து முழுமையான அறிக்கை சமர்பிக்கப்பட உள்ளது. அத்துடன் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை ஜெனீவா செல்வதற்கு முன்னர் நிறைவேற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

மறுபுறம் தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தினால் வலியுறுத்தப்படும் மாகாண சபை தேர்தல் குறித்து அரசாங்கத்தின் செயல்பாடுகள் உற்சாகமாக இல்லை. பெரும்பாலும் இந்த தேர்தலை அடுத்த வருடத்திற்கு ஒத்திவைக்கவே அரசாங்கம் ஆர்வம் காட்டி வருகின்றது.

தேர்தல் முறைமை மற்றும் புலம்பெயர் இலங்கையர்களுக்கு வாக்களிக்கும் உரிமை போன்ற காரணிகளின் அடிப்படையில் மாகாண சபை தேர்தலை அடுத்த வருடத்திற்கு ஒத்திவைக்க திட்டமிட்டுள்ளது. அத்துடன் நீண்ட காலமாக தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக வழிகாட்டுதல் கோரி தேர்தல் ஆணைக்குழு, ஜனாதிபதி செயலகத்திற்கு பல கடிதங்களை அனுப்பியுள்ளதாகவும் , ஆனால் இதுவரை ஜனாதிபதி செயலகத்திலிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை என்று ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்டரீதியான தடைகள் குறித்து விளக்கம் கோரி ஜனாதிபதி செயலகத்திற்கு சுமார் நான்கு கடிதங்களை அனுப்பியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவால் எதுவும் செய்ய முடியாது என்பதுடன், தேர்தல் குறித்து முடிவு தற்போது சட்டத் திருத்தங்களை சார்ந்துள்ளது.

இந்த விவகாரம் குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தாலும், அதற்கு அரசாங்கப் பிரதிநிதிகளை நியமிக்க இன்னும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

எதிர்க்கட்சி தனது நான்கு பிரதிநிதிகளாக ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேசன், நிசாம் காரியப்பர் மற்றும் சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோரை நியமித்துள்ளது. இருப்பினும் அரசாங்கம் இதுவரை தனது 12 பிரதிநிதிகளை பரிந்துரைக்கத் தவறியதால் தெரிவுக் குழு கூட முடியவில்லை. இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே மாகாண சபை தேர்தல் குறித்து ஜெனிவாவில் அரசாங்கம் தெளிவுப்படுத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நாணய...

அமைகிறது.

குறித்த திட்டங்களை அடுத்த 5 ஆண்டுகளுக்குள் முழுமையாக நிறைவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பரமேஸ்வரன் ஐயர் மற்றும் இலங்கைக்கான பணிப்பாளர் டேவிட் சிஸ்லென் ஆகியோர் ஏற்கனவே திறைசேரி செயலாளர் ஹர்ஷன சூரியப்பெருமவுடன் இது குறித்து ஆலோசித்துள்ளனர். (அ)

## கிவுல்...

வன்னி மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஆளும், எதிர்த் தரப்பு எம்.பிக்கள், உள்ளூராட்சி மன் றங்களின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் மற்றம் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட் டோருக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலின்போது கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள மாகாவலி அதிகார சபையின் அதிகாரிகள் குழுவொன்று கிவுல் ஓயா திட்டம் சம்பந்தமாக விளக்கக் காட்சிகள் அடங்கிய தெளிவுபடுத்தல்களை முன்னெடுக்கவுள்ளது.

இதேவேளை, தற்போது புதுப்பிக்கப்பட்டுள்ள கிவுல் ஓயாத் திட்டம் சம்பந்தமாக வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலக அதிகாரிகளும், கரைத்துரைப்பற்று பிரதேச செயலக அதிகாரிகளும் மிகத்தீவிரமாக கள ஆய்வுப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறிப்பாக, கடந்த 2ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட மக்கள் போராட்டத்தை அடுத்து, கிவுல் ஓயாத் திட்டத்தினை முன்னெடுப்பதால் காணப்படுகின்ற பிரச்னைகளை கண்டறியும் முகமாகவே குறித்த கள ஆய்வுப் பணிகளை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளதாக குறிப்பிட்டனர்.

ஆரம்பத்தில் குறித்த திட்டத்துக்கான அங்கீகாரத்தை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை வழங்கியிருந்த நிலையில் அத்திட்டம் சம்பந்தமாக அதிகாரிகள் கள ஆய்வுகளை மேற்கொண்டிருக்கவில்லை.

எனினும் தற்போது மக்கள் எதிர்ப்புக்கள் ஏற்பட்டுள்ளதால் அவற்றுக்கு பதிலளிக்கும் வகையில் கள ஆய்வுப் பணிகளை அவசரமாக முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பயங்கரவாதச்...

பயங்கரவாதத்தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும் எனவும், பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவு வாபஸ் பெறப்படவேண்டும் எனவும் வலியுறுத்தி பேராசிரியர் ஜயதேவ உடன்கொட, ஜனாதிபதி சட்டத்தரணிகளான கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன மற்றும் எம்.ஏ.சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன, சட்டத்தரணிகளான ஏ.எம்.பாயிஸ், பவானி பொன்சேகா, ஏர்மிஸா ரீகல், நதீஷானி பெரேரா, ஜெருஷா குறொசெற் தம்பையா, ரவிந்திரன் நிலோஷன் மற்றும் பெனிஸ்லஸ் துஷான் ஆகியோரின் கையெழுத்துடன் சர்வஜன நீதி அமைப்பினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

இலங்கையில் மீண்டும் பயங்கரவாதத்தடைச்சட்டம் மற்றும் அதனை புதிதாக முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவின் ஊடாகப் பதிலீடு செய்தல் என்பன தொடர்பில் வாத, பிரதிவாதங்கள் உருவாகியுள்ளன. இந்நிலையில் பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதாக அரசாங்கம் அளித்த அதன் தேர்தல் வாக்குறுதியை நாம் கேள்விக்குட்படுத்த விரும்புகின்றோம்.

தற்போது முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதற்கான சட்டவரைவை நாம் முற்றாக எதிர்ப்பதுடன், பயங்கரவாதத்தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்படவேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

பயங்கரவாதத்தடைச்சட்டம் நீக்கப்படும் வரை, அச்சட்டத்தின் பிரயோகம் உடனடியாக இடைநிறுத்தப்படவேண்டும் என வலியுறுத்துகின்றோம். அத்தோடு மனித உரிமைகளையும் சட்டத்தின் ஆட்சியையும் உறுதிப்படுத்தி, ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கான நேர்மையான தன்முனைப்பை வெளிக்காட்டுமாறு ஜனாதிபதி, அரசாங்கம், எதிர்க்கட்சி உள்ளிட்ட சகல அரசியல் தரப்புக்களிடமும் கோருகின்றோம்-என்றுள்ளது. (அ)

## சிறீரெலோவின்...

விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில், நீர்கொழும்பு, கொச்சிக்கடை பகுதியில் பி.உதயராசா கைது செய்யப்பட்டுள்ளார்.

பேலியகொடை பகுதியில் கடந்த மாதம் 29 ஆம் திகதி 04 கிலோ 423 மில்லிகிராம் கொக்கேய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

இந்த போதைப்பொருள் கடத்தல் சம்பவத்துடன் சிறீரெலோ கட்சியின் தலைவர் பி.உதயராசா தொடர்புப்பட்டுள்ளார் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாணத்தின் வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், கொழும்பில் இடம்பெற்றதாக கூறப்படும் பல முக்கிய குற்றச் செயல்களுடன் பி.உதயராசா தொடர்புபட்டுள்ளார் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

## மருத்துவ...

எச்சரித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 11ஆம் திகதி தமது அடுத்த கட்ட தொழிற்சங்க நடவடிக்கை குறித்து தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

நாடு தழுவிய ரீதியிலான தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர தமது மத்திய செயற்குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

மருத்துவ சமூகம் நீண்டகாலமாக எதிர்கொண்டு வரும் தொழில்சார் சவால்களையே இந்த நடவடிக்கை பிரதிபலிக்கிறது.

மேலதிக வசதிகள் அல்லது கொடுப்பனவுகள் அன்றி, பெரும்பாலும் தனிப்பட்ட அபாயங்களுக்கு மத்தியில் உத்தியோகபூர்வ சேவைத் தேவைகளுக்கு அப்பால் மருத்துவர்கள் ஆற்றிவந்த பணிகளிலிருந்து விலகியிருப்பதே தற்போதைய நடவடிக்கையாகும் -என்றுள்ளது. (அ)

## தேசிய...

இதற்கமைய, அடிப்படை கைமாற்றல் திட்டம், வருடாந்த மின் கொள்முதல் திட்டம், நீண்டகால மின்னுற்பத்தித் திட்டம் மற்றும் நீண்டகால மின் பரிமாற்ற அபிவிருத்தித் திட்டம் ஆகிய கட்டங்கள் இவ்வாறு நிறைவு செய்யப்பட்டுள்ளதாக மின்சார சபை மறுசீரமைப்புச் செயலணியின் தலைவர் புபுது நிரோஷன் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இதன் இறுதிக் கட்டமான தேசிய மின்சக்தி கொள்கை மற்றும் தேசிய மின் கட்டணக் கொள்கையைத் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வந்த நிலையில், அது இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் நாளை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த அமைச்சரவைப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், மின்சார சபையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அமைச்சர் வெளியிடவுள்ளார்.

குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர், 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மின்சாரச் சட்டம் இரத்துச் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## விளான்...

அங்கு வந்த இரண்டு குழுவினருக்கிடையே இந்த மோதல் இடம்பெற்றது.

இதன்போது இருவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் ஒருவரை கைது செய்த நிலையில் ஏனையோர் தப்பிச் சென்றுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

## ஐ.நா...

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் 2025 ஆம் ஆண்டு டிசெம்பர் முதல் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையிலான காலப்பகுதிக்கு 35.3 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் திரட்ட ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானக் குழு இலக்கு நிர்ணயித்திருந்தது.

இதற்காக தற்போது வரை 22.4 மில்லியன் டொலர் நிதி கிடைத்துள்ளது.

இந்தத் திட்டத்துக்காக அவுஸ்திரேலியா, கனடா, ஜேர்மனி, ஜப்பான், நியூசிலாந்து, அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் நிதியுதவி வழங்கியுள்ளன.

இதுவரை 25 மாவட்டங்களில் 68 பங்குதாரர் அமைப்புகளின் ஊடாக 216,000 இற்கும் அதிகமான மக்கள் இந்த நிவாரணத் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

கடந்த இரண்டு தசாப்தங்களில் இலங்கை சந்தித்த மிக மோசமான வெள்ளம் மற்றும் மண்சரிவை இந்தச் சூறாவளி ஏற்படுத்தியது. நாடு முழுவதும் சுமார் 22 இலட்சம் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ மையத்தின் தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டு டிசெம்பர் 29 ஆம் திகதி வரை 646 பேர் உயிரிழந்துள்ளதுடன், 173 பேர் காணாமல் போயுள்ளனர்.

நிவாரணப் பணிகளை இலங்கை அரசாங்கம் முன்னின்று நடத்துவதுடன், ஐக்கிய நாடுகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் இதற்குப் பக்கபலமாகச் செயல்படுகின்றன.

கல்வி, உணவுப் பாதுகாப்பு, விவசாயம், ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் தங்குமிட வசதி ஆகிய துறைகளுக்கு இந்த முன்னுரிமைத் திட்டத்தின் கீழ் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அமைச்சர்களின் விருப்பத்துக்கேற்ப தொழில்களை தடைசெய்ய முடியாது

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, பெப். 09

கடற்கரையிலிருந்து 200 கடல் மைல் தூரம் பிரத்தியேக பொருளாதார வலயமாக நமது நாட்டுக்கு கடல் உரித்து காணப்பட்ட போதிலும், இதுவரை நமது நாட்டால் மீன்பிடித் தொழிலில் உரிய முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடியாதுள்ளது. அறிவியல் ரீதியிலான மதிப்பீடு இன்றி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோருக்கு மாற்று வருமான மூலங்களை வழங்காமல், அமைச்சர்கள் தங்கள் விருப்பப்படி தொழில்களைத் தடை செய்ய முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக கரைவலை மீனவர்கள் முன்னெடுத்த அமைதிவழி ஆர்ப்பாட்ட இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்னைகளை ஆராயும்போது சஜித் பிரேமதாஸ இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டைச் சூழ கடல் இருந்தாலும், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மீன்பிடித் தொழிலின் பங்களிப்பு 1. 4 சதவீதமாக மாத்திரமே உள்ளது. மீன்பிடி வளங்களைப் பாதுகாக்கவும், மீன்வள பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாமையே இதற்குக் காரணமாகும்.

மீன்பிடித் துறையில் உள்ள பெரும்பாலான கொள்கை வகுப்பாளர்களுக்கு இது குறித்த சரியான தெளிந்த புரிதல் இல்லை. கரைவலை, மடல் பண்ணை, ஒரு நாள் பயணங்கள், பல நாள் பயணங்கள் என பல வகையான முறைகள் காணப்பட்டாலும், அரசாங்கத்துக்கு இது தொடர்பில் போதிய தெளிவில்லை. கரைவலை மீன்பிடிக்கென மீன்பிடி துறைமுகங்கள் கூட அமைந்து காணப்படுகின்றன.

இந்த மீன்பிடித் தொழில் தொழில்நுட்பத்துக்கு ஏற்ப மாறும்போது, எந்த விதிமுறைகளும் இல்லாமல் அமைச்சரின் வெறும் வார்த்தையின் பேரில் இந்த மீன்பிடித் தொழில் தடை செய்யப்பட்டால் அது தவறான நடவடிக்கையாகும்."- என்றார். (எ)

# ஐக்கிய மக்கள் சக்தி ஸ்தாபிக்கப்பட்டு நேற்றுடன் ஆறு வருடங்கள் பூர்த்தி

## கதிர்காமத்தில் விசேட வழிபாடுகள்

மொனராகலை, பெப். 09

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி ஸ்தாபிக்கப்பட்டு ஆறு வருடங்கள் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு, நாட்டு மக்களுக்கும் கட்சிக்கும் ஆசி வேண்டி வரலாற்றுச் சிறப்பு மிக்க புனித கதிர்காமம் கிரிவெஹெர விகாரை வளாகத்தில் நேற்று விசேட சமய நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது, எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவால் புனித அரச மரத்துக்கு "அட்டபிரிகரை" வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள், கட்சியின் தேர்தல் தொகுதி அமைப்பாளர்கள், இணைப்புக்



குழுக்களின் தலைவர்கள், கட்சி செயல்பாட்டாளர்கள் மற்றும் பெருமளவிலான பிரதேச மக்களும் கலந்து கொண்டனர். (எ)

# "முதலாம் தரத்துக்கு டிஜிற்றல் உபகரணங்கள் தேவைப்படவில்லை"

கொழும்பு, பெப். 09

முதலாம் தரத்துக்கு புதிய கல்வி மறுசீரமைப்பின் பிரகாரம் டிஜிற்றல் உபகரணங்கள், ஸ்மாட் பலகை தேவைப்படவில்லை என்று உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பிரதி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"புதிய கல்வி மறுசீரமைப்பு இந்த வருடம் முதலாம் வகுப்புக்கு ஆரம்பித்திருக்கிறோம். 6ஆம் வகுப்புக்கான கல்வி நடவடிக்கை பழைய பாடத்திட்டத்துக்கமைய நடைபெற்று வருகிறது. புதிய கல்வி மறுசீரமைப்பின் பிரகாரம் முதலாம் வருடத்துக்கு டிஜிற்றல் உபகரணங்கள், ஸ்மாட் பலகை தேவைப்படுவதில்லை.

என்றாலும் சில பாடசாலைகள் பெற்றோர்களிடம் பணம் சேகரித்து இந்த உபகரணங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக எமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அவ்வாறு எந்தத் தேவையும் இல்லை.

அதேநேரம் நாட்டில் இருக்கும் அனைத்து பாடசாலைகளுக்கும் டிஜிற்றல் உபகரணங்கள் மற்றும் ஸ்மாட் வசதிகளை டிஜிற்றல் அமைச்சின் கீழ் சீன உதவியுடன் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனால் இந்த சந்தர்ப்பத்தில் பாடசாலைகளுக்கு டிஜிற்றல் உபகரணங்கள் தேவைப்படுவதில்லை."- என்றார். (எ)

# வெளிநாட்டு பணவனுப்பல்கள் ஜனவரி மாதத்தில் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 09

2026 ஜனவரி மாதத்தில் வெளிநாட்டுத் தொழிலாளர்களால் 751. 1 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் இந்த விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன்படி, 2025 ஜனவரி மாதத்தில் நாட்டுக்குக் கிடைத்த வெளிநாட்டுப் பணவனுப்பல் 573. 0 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளன.

இதற்கமைய, கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2026 ஜனவரி மாதத்தில் வெளிநாட்டுப் பணவனுப்பலானது 178.1 மில்லியன் அமெரிக்க டொலர் அதிகரிப்பை காட்டியுள்ளது.

மேலும், 2026 ஜனவரி மாதத்தில் சுற்றுலா வருமானமாக 378. 3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஈட்டப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 2025 ஜனவரி மாதத்தில் கிடைத்த சுற்றுலா வருமானம் 400.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்ததுடன், 2026 ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும்போது இது 5. 6 சதவீத வீழ்ச்சியாகும் என மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (எ)

# கணக்காய்வாளர் நாயக நியமனம்: சரியான பாதைக்கான நகர்வாகும்

கொழும்பு, பெப். 09

தேசிய கணக்காய்வாளர் திணைக்களத்துக்குள் இருந்தே கணக்காய்வாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதானது சரியான பாதையில் பயணிப்பதை முன்நிறுத்தி அரசமைப்பு பேரவையால் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கிய நகர்வாகும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய கணக்காய்வாளர் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதி கணக்காய்வாளர் நாயகமான சமுதிகா ஜெயரத்னவை தலைமை கணக்காய்வாளர் நாயகமாக நியமிப்பதற்கு ஏகமனதாக அனுமதி வழங்கியதை அடுத்து, அவர் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்த நிலையில், கரு ஜயசூரிய அவரது உத்தியோக பூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் பதிவொன்றை செய்துள்ளார்.

"மிகக்காத்திரமான தற்போதைய சூழ்நிலையில் அரசமைப்புப் பேரவையின் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் சிவில் சமூகப்பிரதிநிதிகளுக்கு எமது வாழ்த்துகளைக் கூறிக்கொள்கின்றோம் - எனறார். (எ)

# பொலிஸ் சுற்றிவளைப்பு: ஒரேநாளில் 526 பேர் கைது

கொழும்பு, பெப். 09

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 526 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேநேரம், 36, 840 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், 15 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 316 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 144 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 430 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 124 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 6,009 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மீனவர் சத்தியாக்கிரகப் போராட்டம் நான்காவது நாளாகவும் தொடர்ந்தது

கொழும்பு, பெப். 09

உழவியந்திரங்களுடன் பொருத்தப்பட்ட வின்ச் இயந்திரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கரைவலை மீன்பிடி நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக் கோரி மீனவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நான்காவது நாளாகவும் தொடர்ந்தது.

முல்லைத்தீவு, கொக்கிளாய் உள்ளிட்ட பல கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த கரைவலை மீனவர்களால் பெப்ரவரி 5 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் ஜனாதிபதி செயலக அதிகாரிகளுடன் பல சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட போதிலும், பேச்சுவார்த்தைகள் ஒரு தீர்மானமும் இல்லாமல் முடிவடைந்ததாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இதன்படி, சத்தியாக்கிரகப் போராட்டத்தை இடையூறு இல்லாமல் தொடர அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

# அனர்த்தத்துக்கு பின்னரான தேவை மதிப்பீடு குறித்து கலந்துரையாடல்

கொழும்பு, பெப். 09

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அருண ஜெயசேகர தலைமையில், அனர்த்தத்துக்கு பின்னரான தேவை மதிப்பீடு தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று பாதுகாப்பு அமைச்சின் வளாகத்தில் நடைபெற்றது.

தேசிய கொள்கை திட்டமிடல் திணைக்களம் மற்றும் ஏனைய தேசிய மற்றும் சர்வதேச அபிவிருத்திப் பங்காளர்களின் ஒத்துழைப்புடன், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் இந்த அனர்த்தத்துக்கு பின்னரான தேவை மதிப்பீட்டுச் செயல்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள், கடந்த அனர்த்த நிலைமையால் பாதிக்கப்பட்ட அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்ட பௌதீக ரீதியான சேதங்கள், பொருளாதார இழப்புகள் மற்றும் சமூகப் பாதிப்புகள் குறித்த தரவுகளை முறைப்படி சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றை இந்தச் செயல்பாடு உள்ளடக்கியுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை, அவர்களின் வாழ்வாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்குப் பெரும் சேதங்களை ஏற்படுத்திய "டித்வா" புயலின் பாதிப்புகளால் ஏற்பட்டுள்ள அடிப்படைத் தேவைகளை மதிப்பீடு செய்யவும், அது தொடர்பான தரவுகளை முன்வைக்கவும், தெளிவுபடுத்தவும் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.